**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்**

**OS.No. 42/ 2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.விஸ்வநாதன், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 22.02.2024**

**பெயர் - இராஜலட்சுமி**

**க/பெ - கோபி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12.00 P.M**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

4. நான் திருமணமாகி எனது தாயார் வீட்டிற்கு வந்த போது க்ர்ப்பமாக இருந்தேனா என்றால் ஆமாம். அந்த நேரத்தில் எனக்கும் எனது கணவருக்கும் பிரச்சனை இருந்ததால் எனது தாயார் என்னை எனது வீட்டிற்கு அழைத்தார் என்றால் சரியல்ல. மனு சொத்தின் முகவரி 81/16ஏ அன்னை சிவகாமி நகர் 2வது தெரு என்றால் சரிதான். எனது தாயார் வீட்டு முகவரி என்ன என்றால் கதவுஎண் 81/16ஆகும். கதவுஎண் 81/16ஏ என்ற முகவரிகொண்ட ஒரு வீடு இல்லை என்றும் நான் வழக்கிறகாக பொய்யாக உருவாக்கி உள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கதவுஎண் 81/16ஏ என்பதை யார் எனக்கு கொடுத்தது என்றால் கிராம நிர்வாக அலுவலர்

கொடுத்தார். அதற்கான ஆதாரம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கு என்னிடம் குடும்பஅட்டை ஆதார்அட்டை போன்றவைகள் உள்ளன. குடும்பஅட்டை மற்றும் ஆதார்அட்டைகளில் நானாகத்தான் அந்த முகவரியை வழக்கிற்காக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டில் வந்து பார்த்த பின்பே என்க்கு குடும்பஅட்டை வழங்கப்பட்டது. மனுசொத்து சென்னை மாநகராட்சிக்கு உட்பட்டது என்றால் சரிதான். இந்த சிவில் வழக்கு நிலுவையில் உள்ள கால கட்டத்தில் வருவாய் கோட்டாச்சியரிடம் இதே வழக்கு சம்பந்தமாக நான் ஒரு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக கூறுகிறேன் என்றும் நான் மனு கொடுத்து அதில் விசாரணை நடத்தி அதில் உத்தரவும் பிறப்பிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. நானாக எந்த மனுவும் கொடுக்கவில்லை. தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் விசராணைக்காக கொடுக்கப்பட்ட அழைப்பாணை என்றால் சரிதான். **(மேற்படி ஆவணத்தை சாட்சி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி ஆவணம் பி.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மேற்படி வருவாய் கோட்டாச்சியர் விசாரணையில் வழங்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தை சாட்சி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் மேற்படி ஆவணம் ˙பி.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**5,** மேற்படி பி.சா.ஆ.1ல் பெறுநர் என்ற இடத்தில் இராஜலட்சுமி என்று குறிப்பிட்டு எண் 25 பாரதி நகர் 1வது தெரு கொருக்குபேட்டை சென்னை-21 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தில் எந்த கடிதம் வந்தாலும் அதை எனக்கு தாய் வீட்டிலிருந்த கொடுக்கமாட்டார்கள் என்பதால் கொருக்குபேட்டை முகவரியை காவல் நிலையத்தில் கொடுத்தேன் பி.சா.ஆ.2லிலும் பெறுநர் என்ற

இடத்தில் எனது பெயருக்கு கீழ் கொருக்குபேட்டை முகவரிதான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதிலிருந்து நான் வழக்கு சொத்தில் வசிக்கவில்லை என்றும் கொருக்குபேட்டையில் தான் வசிக்கிறேன் என்றும் கூறினால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் தான் வசிக்கிறேன். வழக்கு சொத்தில் நான் வீடு எதுவும் கட்டவில்லை என்றும் ஏற்கனவே இருந்த இடத்தில் ஒரு சிமெணட் சீட் மட்டுமே போட்டு உள்ளேன் என்றால் சரியல்ல. தரையில் இருந்து ஓடு வரை நான் முழுவதுமாக அந்த வீட்டினை கட்டினேன். நான் கூறுவது பொய் என்றும் அதற்கான ஆதாரங்கள் நான் தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. அனைத்து ஆதாரங்களும் உள்ளன கேட்டால் சமா்ப்பிக்க தயாராக உள்ளேன். வீடு கட்டியதற்கு அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் வீடு எதுவும் கட்டவில்லை என்றால் சரியல்ல.

6, வழக்கு சொத்தில் உள்ள கழிவரைகள் நான் வீடு கட்டடியதாக கூறும் காலத்திற்கு முன்னதாகவே உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ2 என்ன ஆவணம் என்றால் நிலவரி ரசீது ஆகும். எந்த தேதியில் அதை கட்டினேன் என்றால் 04.01.2020ல் கட்டி உள்ளேன். அதை யாரிடம் கட்டி உள்ளேன் என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் கட்டினேன். மேற்படி கிராம நிர்வாக அலுவலா் அதில் கையொப்பம் இட்டு உள்ளாரா என்றால் கையெழுத்து இட்டு உள்ளாா். மேற்படி வா.சா.ஆ2ல் உள்ள சா்வே எண் வழக்கு சொத்திற்கு உரியதா என்றால் ஆமாம். நான் வீட்டினை 2015 கட்டியதாக கூறியுள்ள நிலையில் நிலவரியை 2020ல் செலுத்தியுள்ளதாக கூறுவது முரண்பாடாக உள்ளது என்றால் சரிதான். அதனால் வா.சா.ஆ 2 ஒரு போலியான ஆவணம் என்றும் அது வழக்கிற்காக தயாா் செய்யப்பட்டது என்றும் கூறினால் சரியல்ல. அந்த வீட்டில் 2015லிருந்து வசிக்கிறோம் 2020ல் தான் ரசீது வழங்கினாா்கள். வா.சா.ஆ3 என்ன

ஆவணம் என்றால் சி.எஸ்.ஆர் ரசீது ஆகும். அது யார் மீது சி.எஸ்..ஆர் போடப்பட்டது என்றால் எனது தாய் மாமா முனுசாமி மீது போடப்பட்டது. எதற்காக போடப்பட்டது என்றால் வீட்டை விட்டு காலி செய்யும் படி என்னிடம் சண்டை போட்டதால் நான் புகார் கொடுத்ததன் அடிப்படையில் சி.எஸ்.ஆர் போடப்பட்டது. மேற்படி சி,எஸ்,ஆர். மீது என்ன மேல் நடவடிக்கை காவல் நிலையத்தில் எடுக்கபட்டது என்றால் சண்டை போடவேண்டாம் என்று கூறி மேற்படி முனுசாமி கழிவரையை திறந்து வைப்பதாக கூறியதான் அடிப்படையில் அனுப்பி வைத்தார்கள். நான் பொய்யாக புகார் கொடுத்ததால் தான் மேல் நடவடிக்கை எடுக்கபடவில்லை என்றால் சரியல்ல, வா.சா.ஆ4 என்ன ஆவணம் என்றால் அதுவும் சி.எஸ்.ஆர் ரசீது தான். அது எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் 23.03.2020ல் கொடுக்கப்பட்டது. அது எதற்காக கொடுக்கபட்டது என்றால் என்னிடம் வீட்டை காலி செய்யும் படி கூறி சண்டை போட்டதால் புகார் கொடுத்தன் அடிப்படையில் கொடுக்கபட்டது. நான் கூறுவது தவறு என்றும் அதில் கட்டையால் 5 நபர்கள் தாக்கியதாக புகார் கொடுக்கபட்டது என்றால் சரிதான். சண்டை போடும் போது என்னை கட்டையால் தாக்கினார்கள். மேற்படி சி,எஸ்,ஆர் மீது என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் விசாரணை செய்து அனுப்பி வைத்தார்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் கொடுத்த புகார் பொய் என்பதால் தான் மேல் நடவடிக்கை எதும் எடுக்கவிலலை என்றும் புகாரில் உண்மை இருந்திருப்பின் மேல் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது .)**

**விசாரணை முடியும் நேரம் : 12.50 P.M**